International Refereed Journal of Tamil Studies Research (IRJTSR) E-ISSN: 2582-5313
தமிழ் ஆய்வு ஆராய்ச்சியின் சர்வதேச நடுவர் இதழ் (ஐ.ஆர்.ஜே.டி.எஸ்.ஆர்)
Volume: 02 Issue: 01 January to March 2020 www.irjtsjournal.org

# சங்க இலக்கியத்தில் கார்த்திகை விளக்கு

**பேராசிரியர் வை.இராமராஜபாண்டியன்,**
புலத்தலைவர்,
தமிழியற்புலம்,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை *-21*

முன்னுரை

மனிதர்கள் அனைவருமே ஏதோ ஒரு வகையில் சமுதாயத்தில் நிலவுகின்ற பண்பாடுகள், பழக்கவழக்கங்களுக்கு ஆட்பட்டவர்களாகவே இருக்கின்றனர். அவற்றிலும் நம்பிக்கைகள் எனும் போது, அதன் மீது நாட்டம் செலுத்தவே எண்ணுகின்றனர். நம்பிக்கைகளை காலந்தோறும் பின்பற்றுவதோடு, அதற்கான காரணகாரியங்களை பின்பற்றி விழாக்களாகக் கொண்டாடி மகிழ்கின்றனர்.

காலந்தோறும் விழாக்கள் என்பது மக்களால் கொண்டாடப்பட்டு வருகின்றது. விழாக்கள் ஒவ்வொன்றும் ஒருவிதமான நம்பிக்கைகளை மையமாக வைத்தே நடத்தப்பட்டு வந்துள்ளன. அவற்றிலும் தமிழர்கள் என்றாலே விழாக்களினை காரணகாரியத்தோடு சிறப்பாக தொடர்ந்து நடத்திக்கொண்டு வருபவர்கள். அந்த வகையில் கார்த்திகை விழா என்பது இன்றுள்ள, நேற்றுள்ள, சங்ககாலம் முதற்கொண்டு கொண்டாடப்பட்டு வந்துள்ளன.

சங்ககாலம் தொடங்கி இன்று வரை கார்த்திகை விழாவானது தொடர்ந்து நடந்துகொண்டு வந்துள்ளது. சங்க இலக்கியங்களில் கார்த்திகை விழாவிற்கான இடம் எவ்வாறு இருந்துள்ளது என்பதினை அறிவதற்காக "சங்க இலக்கியத்தில் கார்த்திகை விளக்கு" என்னும் பொருண்மையில் இக்கட்டுரையானது முயல்கிறது.

விழா நாள்

"மக்கள் தங்களுடைய நன்மையினைக் கருதி, விழாக்களில் நன்மையினை எதிர்நோக்கும் உள்ளம், செயல்களை நல்ல நாளிலும், நல்ல நேரத்திலும் ஆற்றத் தொடங்கி நன்மையினை விழைகின்றது. அந்நிலையில் அது நம்பிக்கை வயப்பட்டதாக மாறிவிடுகிறது. மரபுவழியாக மக்களினத்திடையே தொடர்ந்து நிலைபெறுவதற்கு நம்பிக்கையும் ஒரு காரணமாக அமைகின்றது. மனிதனது வாழ்க்கையினை விண்கோள்களின் நிலைமைகள் கட்டுப்படுத்தப்படுகின்றன என்ற

கருத்தேற்றத்தின் அடிப்படையில் மக்கள் நல்ல நாள், நல்ல கோள்கள் கூடிவரும் நேரத்தில் விழா எடுக்கின்றனர்" என்று க.காந்தி[1] கூறுகின்றார். பழந்தமிழரிடமும் இவ்வழக்கம் நெடுங்காலமாக இருந்துள்ளது. விழாக்களைப் பெரும்பாலும் வளர்பிறை மற்றும் மதிநிறைந்த நாட்களில் தொடங்கியுள்ளது பார்க்க முடிகிறது. அந்த வகையில் கார்த்திகைத் திருவிழா முழுமையான பிறை தோன்றிய நல்ல நாளில் தொடங்கியதை,

"மழைகால் நீங்கிய மாக விசும்பிற்

குறுமுயல் மறுநிறங் கிளர மதிநிறைந்து

அறுமீன்சேரு மகலிருள் நடுநாள்

மறுகுவிளக் குறுத்து மாலை தூக்கிப்

பழவிறல் மூதூர்ப் பலருடன் துவன்றிய

விழவுட னயர......" (அகம். 141: 6-11)

என்று அகநானூற்றுப் பாடல் தெரிவிக்கின்றது. மேலும் நன்மை கருதியும், வாழ்க்கையில் முன்னேற்றம் அடைய வேண்டும் என்பதற்காக முக்கியமான விழாக்கள் அனைத்தும் வளர்பிறையில் நடப்பதை பழங்காலம் முதல் இன்றளவும் கண்கூடாகக் கண்டு வருகிறோம்.

கார்த்திகை விளக்கு விழா

பழந்தமிழகத்தில்; விழாக்கள் சிற்றூர்களிலும், பேரூரிலும் கொண்டப்பட்டதை இலக்கியச் சான்றுகள் தெரிவிக்கின்றன. விழா எடுப்பதற்கான காலமாக அன்றைய காலத்தில் வேனிற்காலத்தைக் கருதியுள்ளனர். விழாக்களின் இயல்புக்கு ஏற்ப, விழாக்கள் அதிகாலைப் பொழுதிலும், சூரியன் மறையும் மாலைப் பொழுதிலும் கொண்டாடப்பட்டுள்ளன. அந்த வகையில் கார்த்திகை விளக்கீடு விழா மாலையில் கொண்டாடப்பட்டுள்ளதை,

"அருஞ்சுரக் கவலைய அதர்படு மருங்கின்

நீளரை யிலவத் தூழ்கழி பன்மலர்

விழவுத் தலைக்கொண்ட பழவிறல் மூதூர்

நெய்யுமிழ் சுடரிற் கால்பொரச் சில்கி

வைகுறு மீனிற் றோன்றும்

மைபடு மாமலை விலங்கிய சுரனே” (அகம்.17: 17-22)

என்னும் இலக்கியச் சான்றுகள் தெரிவிக்கின்றன. கார்த்திகை விளக்கு விழா சங்க காலத்திலேயே இருந்துள்ளது என்பதை,

“உலகுதொழில் உலந்து, நாஞ்சில் துஞ்சி

முழைகால் நீங்கிய மாக விசும்பில்

குறுமுயல் மறுநிறம் கிளர, மதிநிறைந்து,

அறுமீன் சேரும் அகல்இருள் நடுநாள்,

மறுகுவிளக்கு உறுத்து மாலை தூக்கி,

பழவிறல் மூதூர்ப் பலருடன் துவன்றிய

விழவுடன் அயர, வருகதில் அம்ம!” (அகம்.141: 5-11)

என்னும் அகநானூற்றுப் பாடலானது, பிரிந்த தலைவன் திருக்கார்த்திகை விழாவைத் தங்களுடன் கொண்டாட வரவேண்டும் என்று தலைவி தனது தோழியிடம் விருப்பத்தைத் தெரிவிக்கும் நிலை புலப்படுகிறது.

நமது வெற்றி மிக்க, பழமையான ஊரில் மழைக்காலம் முடிந்துவிட்டது. உழவுத்தொழிலும் நின்றுவிட்டது. கலப்பைகள் சும்மா கிடக்கின்றன. மழை பெய்து நிற்க, தூய்மையாக விளங்கும் வானத்தில். தன் களங்கமும் விளங்கும்படி, நிறைமதி ஒளி வீசும், அதனோடு கார்த்திகை நாள்மீன் சேரும் நாளின் நடுயாமத்தில், ஊர் மக்கள் தெருக்களில் எல்லாம் விளக்கேற்றி, வரிசையாக வைத்து, மாலைகளாகத் தொங்கவிட்டு, எல்லோரும் ஒன்றாய்க் கூடி ஆடிப்பாடி விழாக் கொண்டாடுவர். அப்போது தலைவன் பொருள் ஈட்டி கார்காலத்தில் வந்துவிடுவேன் என்று சொல்லி வராவிட்டாலும், இத்திருக்கார்த்திகை விழாவிற்காவது தன்னுடன் சேர்ந்து விழாவை கொண்டாட வேண்டும் என்று தோழிடம் தலைவி கூறுகிறாள்.

வீரை என்னும் ஊரிலிருந்து ஆண்ட வேளிர்குடி அரசன் வேண்மான் வெளியன் என்னும் தித்தனுடைய நாட்டில் மாலை நேரத்தில் பனி பெய்யத் தொடங்கின பனி பொழிந்தது. முரசு முதலிய சங்குகளுடன் ஒலித்த போது விளக்குகள் ஏற்றப்பட்டன என்பதை,

"வீரை வேண்மான் வெளியன் தித்தன்

முரசுமுதற் கொளீஇய மாலை விளக்கின்

வெண்கோடு இயம்ப நுண்பனி அரும்பக்

கையற வந்த பொழுது………………." (நற்.58: 5-7)

என்னும் பாடலின் மூலம் அறிய முடிகிறது.

விளக்கேற்றும் முறை

பண்டைய காலத்தில் மகளிர் கார்த்திகை மாதம் விளக்கேற்றும் முறை இருந்துள்ளதை,

"இலைஇல மலர்ந்த முகைஇல் இலவம்

கலிகொள் ஆயம் மலிபுதொகுபு எடுத்த

அம்சுடர் நெடுங்கோடு பொற்பத் தோன்றி" (அகம்.11: 3-5)

என்னும் பாடலில் சூரியனால் வெப்பம் மிகுந்த காட்டில் அரும்பின்றி மலர்ந்துள்ள இலவமரப்பூக்கள், மகளிர் மகிழ்ந்தெடுக்கும் கார்த்திக விழா விளக்குகளின் வரிசை போல அழகாகத் தோன்றுகின்றன என்று ஔவையார் சிறப்பாகப் பாடியுள்ளார்.

கார்த்திகை விளக்குகள் மலைமீது ஏற்றப்படுவதை,

"…………………… வான்உலந்து

அருவி ஆன்ற உயர்சிமை மருங்கில்,

பெருவிழா விளக்கம் போல, பலஉடன்

இலைஇல மலர்ந்த இலவமொடு

நிலைஉயர் பிறங்கல் மலைஇறந் தோரே" (அகம்.185: 9-13)

என்னும் பாடலானது, உயர்ந்த மலை உச்சிகளிலிருந்து அருவிகள் கொட்டவில்லை. ஆனால் அந்த உச்சிகளில் இலவ மரங்கள் கார்த்திகை விழாவிற்கு ஏற்றும் விளக்கு வரிசை போல, இலையே இன்றிப் பூத்துள்ளன என்பதை அறியமுடிகிறது. மேலும்,

"அகல்இரு விசும்பின் ஆஅல் போல

வாலிதின் விரிந்த புன்கொடி முசுண்டை" (மலை.100-101)

என்னும் பாடலானது அகன்ற பெரிய வானத்திலுள்ள கார்த்திகை மீன் போல வெண்மையாக முசுண்டைப் பூ விரிந்து மலர்ந்து என்று கூறுகின்றது. ஆஅல் என்பது கார்த்திகை மாதத்தில் தோன்றும் கார்த்திகை என்னும் வீண்மீன் கூட்டம்.

கார்த்திகை நாளில் நம் வீட்டில் உள்ளவர் ஏற்றி வைத்த விளக்கொளி போலத் தோன்றிப் பூக்கள் பூக்கத் தொடங்கி விட்டன என்பதை,

"நலம் மிகு கார்த்திகை, நாட்டர் இட்ட

துலை நாள் விளக்கின் தகை உடையவாகி,

புலம் எலாம் பூத்தன தோன்றி"2 (கார் நாற்பது.26)

என்னும் பாடல் மூலம் கார்த்திகைத் தீபம் இருந்துள்ளமைக்கு சான்று பகர்கிறது.

அழல் என்பது கார்த்திகை நாளைக் குறிக்கும். ஆடு என்னும் மாதத்தில் வரும் அழல். நாள் என்பது மேடம் என்னும் சித்திரை மாதத்தில் வரும் கார்த்திகை நட்சத்திர நாளைக் குறிக்கும் என்பதை,

"ஆடியல் அழற்குட்டத்து" (புறம்.229: 1)

என்னும் புறநானூற்றுப் பாடலின் மூலம் காணமுடிகிறது.

கார்த்திகைச் சாறு

சோழன் வென்ற போர்க்களத்தில், காலாட்படையினர் ஒருவர் மேல் ஒருவர் தாக்கிக் கொண்டதால், அவர்களின் உடலிலிருந்து கொட்டும் இரத்தமானது, கார்த்திகை விழாவில் ஏற்றி

வைக்கப்பட்ட திருவிளக்குகளில் வெளிப்படும் செந்தீயைப் போன்று இருந்தது என்று உவமை கூறப்பட்டமையை,

"ஆர்ப்புஎழுந்த ஞாட்பினுள் ஆள்ஆள் எதிர்த்துஓடி,

தாக்கி எறிதர, வீழ்தரும் ஒண்குருதி

கார்த்திகைச் சாற்றில் கழி விளக்குப் போன்றனவே"3

(களவழி நாற்பது – 17)

என்னும் பாடல் மூலம் கார்த்திகைச் சாறு விழா குறிக்கப்படுகிறது.

உழவர்களுக்கு உதவும் கார்த்திகை தீபம்

உழவர்களுக்கு நன்மை புரியும் வகையில் கார்த்திகை மாதத்தில் வீடுகள் முழுவதும் விளக்கேற்றும் வழக்கத்தை முன்னோர்கள் கடைபிடித்துள்ளனர். உழவர் பெருமக்களுக்கு உதவிட சமூகத்தினர் செய்த உதவித் திருவிழாவே தீபத் திருவிழா என அழைக்கப்படுகிறது.

"பனியும், மழையும் அதிகமாகக் காணப்படும் ராபிப் பருவம் என்ற பின்பருவத்தில்தான் பூச்சித் தாக்குதல் அதிகம் இருக்கும். பிசானம், தாளடி, சம்பா பயிர்கள் இந்தப் பூச்சித் தாக்குதலுக்கு ஆளாகின்றன. வடகிழக்குப் பருவமழை காரணமாக கூட்டுப் புழுக்களில் இருந்து தாய் அந்துப் பூச்சிகள் அதிகளவில் வெளிவரும். இந்த அந்துப் பூச்சிகள் இடும் முட்டையிலிருந்துதான் புழுக்களும், பூச்சிகளும் உருவாகி பயிர்களைத் தாக்கி சேதப்படுத்துகின்றன. இத்தகைய தாக்குதலுக்கு மூல காரணமாக விளங்கும் தாய் பூச்சிகளை விளக்கு வெளிச்சத்தால் கவர்ந்து அழிப்பதன் மூலம் தாக்குதலைக் கட்டுப்படுத்தும். இந்த விளக்குப் பொறியைத் தான் திருக்கார்த்திகை தீபம் என் அடிப்படையில் வீடுகளில் ஏற்றி வைத்து முன்னோர்கள் கடைபிடித்து வந்துள்ளனர்.

முன்னிரவு நேரத்தில் தான் பயிர்களுக்கு பூச்சிகளினால் தீங்கு ஏற்படும். எனவே அனைவரும் பயிர் பாதுகாப்பின் காரணமாக வீடுகள்தோறும் வாசற்பகுதிகளில் விளக்கு வைக்கப்படுகிறது. திருக்கார்த்திகை நாளிலும், அதன் தொடர்ச்சியாக மூன்று நாட்களிலும் அதிக அளவில் விளக்குகள் ஏற்றப்படுகின்றன. மேலும், பலர் கார்த்திகை மாதம் முழுவதும் வீடுகளில் வாசலில் தீபம் ஏற்றுவர். இந்த விளக்கு வெளிச்சத்தில் முன்னிரவு நேரத்தில் வரும் தீமை செய்யும் பூச்சிகள் கவர்ந்து இழுத்து அழிக்கப்படுகின்றன"4 என்று தோட்டக்கலைத்துறை இயக்குநர் தி.சு.பாலசுப்பிரமணியன் கூறுகிறார்.

## முடிவுரை

கார்த்திகை விழாவானது சங்கச் சமூகத்தில் மிக முக்கியமான விழாவாக இருந்திருக்க வேண்டும். ஏனெனில் தலைவனைப் பிரிந்த தலைவி, தோழியிடம் தன்னுடைய பிரிவாற்றாமையை எண்ணி வருந்தும் போது, இந்தக் கார்த்திகை விழாவிற்காகவாது தலைவன் என்னை வந்து சந்தித்து, என்னுடன் இவ்விழாவினைக் கொண்டாட வேண்டும் என்று தனது விருப்பத்தினை தெரிவித்துள்ளாள். வரிசையாகப் பூத்துக் குலுங்குகின்ற பூக்களானது, கார்த்திகை விழாவில் இருக்கின்ற விளக்குகள் போல இருப்பதாக கூறுகின்றார். போர் களத்தில் வெட்டப்பட்டு இறந்த போர் மறவரின் இரத்தம் கார்த்திகை விளக்குகளில் இருந்து வெளிப்படுகின்ற நெருப்புபோல இருப்பதாக உவமை கூறப்பட்டுள்ளது. ஆதலால் கார்த்திகை விழாவானது சங்க இலக்கியத்தில் சிறந்த இடத்தினைப் பெற்றிருப்பதை அறிய முடிகின்றது.

## முதன்மை நூல்:

[1] தமிழண்ணல், (ப.ஆ), சங்க இலக்கியம் மக்கள் பதிப்பு வரிசை, கோவிலூர் மடாலயம், கோவிலூர். (முதற்பதிப்பு – ஏப்ரல், 2003)

## துணைநின்ற நூல்கள்:

[1] க.காந்தி, தமிழர் பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும். உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை. முதற்பதிப்பு – 2008
[2] அறவாணன்.க.ப, கார் நாற்பது, தமிழ்க்கோட்டம், அமைந்தகரை, சென்னை. முதற்பதிப்பு – 2010
[3] அறவாணன்.க.ப, களவழி நாற்பது, தமிழ்க்கோட்டம், அமைந்தகரை, சென்னை. முதற்பதிப்பு – 2010
[4] தினமணி நாளிதழ். 20.11.2013